(171)

## சுருக்கம்

பொதுப்பணிகள் – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படை பணிநியமனம் – பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறை – திரு.ரா.அருண்குமார் த/பெ. (அமரர்) திரு.என்.ராஜேந்திரன் – பணிவரன்முறை செய்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

### மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத் (ஏபி1) துறை

அரசாணை (2ப) எண்.26 நாள்.24.03.2023
சுபகிருது, பங்குனி – 10
திருவள்ளுவர் ஆண்டு 2054

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கடித எண்.83977/பதொ.4/ இரு3/2019, நாள் 31.10.2022.

******

**ஆணை:**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர் அவர்கள் பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு மருந்துத் துறையில் தஞ்சாவூர் சுகாதாரப் பகுதி மாவட்டத்தில் சில்லாத்தூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் ஆய்வக உதவியாளராக பணியாற்றி வரும்போது 24.05.2007 அன்று பணியிடை மரணமடைந்த திரு.என்.ராஜேந்திரன் என்பவரின் மகன் திரு.ரா.அருண்குமார் என்பவர் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டு 16.09.2021 முற்பகல் ஆலூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையம், திருவாரூர் சுகாதார பகுதி மாவட்டத்தில் பணியில் இணைந்தார் என்று தெரிவித்து தனியரின் தற்காலிக பணியினை அவர் இளநிலை உதவியாளராக இணைந்த நாளான 16.09.2021 முற்பகல் முதல் வரன்முறைப்படுத்துமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத்துறை இயக்குநரின் கருத்துரு, மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி தனியரது சான்றிதழ்கள்/ ஆவணங்கள், அரசு ஆணைகளின் அடிப்படையில் ஆய்வு செய்ததில், திரு.ரா.அருண்குமார் என்பவர் கருணை அடிப்படை பணி நியமனம் தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்துள்ளார்.

3. இந்நிலையில், மேலே பத்தி ஒன்றில் கண்டுள்ள பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்ட திரு.ரா.அருண்குமார் என்பவரின் பணியினை, அவர் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறையில் இளநிலை

உதவியாளராக பணியில் சேர்ந்த நாளான 16.09.2021 முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில், அப்பதவிக்கான உடற்தகுதி பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனைக்குட்பட்டு வரன்முறை செய்யலாம் என்று அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. இவ்வாறு தனியரின் பணியினை முன்தேதியிட்டு வரன்முறை செய்வதால், ஊதிய உயர்வுகள் / ஊதிய நிலுவை ஏதுமிருப்பின் விதிகளின்படி அவற்றைப் பெற தனியர் தகுதியுடையவராகிறார்.

4. இவ்வாணை தொழிலாளர்கள் நலன் (ம) திறன் மேம்பாட்டுத் துறையின் அ.சா.எண்.1415/க்யூ1/2022-1, நாள் 28.02.2023 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அ.சா.எண்.4231170/ஜி.2/2023, நாள் 13.03.2023 ஆகியவற்றின் ஒப்புதலோடு வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

ப. செந்தில்குமார்,
அரசு முதன்மைச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர், சென்னை-600 006.

தனியர் (பொது சுகாதாரம் மற்றும் நோய்த் தடுப்பு மருந்துத் துறை இயக்குநர், சென்னை-600 006 வழியாக)

மாநில கணக்காயர், சென்னை-600 018.

மாவட்ட கருவூல அலுவலர், திருவாரூர் மாவட்டம்.

<u>நகல்</u>

மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத் (தகவு பிரிவு) துறை, சென்னை - 600 009.

இருப்பு கோப்பு / உபரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

17/04/2023

பிரிவு அலுவலர்.

17/4/23

**பதிவஞ்சல் மூலமாக**

ந.க.எண்.83977/பதொ.4/இரு.3/2019

பொது சுகாதாரம் மற்றும் நோய் தடுப்பு
மருந்துத்துறை இயக்குநரகம், சென்னை-6.
நாள்: 07.06.2023.

பொருள்: பணியாளர் தொகுதி - பொது சுகாதாரம் - தமிழ்நாடு அமைச்சுப் பணி திரு.இரா.அருண்குமார் த/பெ (அமரர்) திரு.என்.ராஜேந்திரன் - கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராக பணிநியமனம் செய்யப்பட்டு பணிவரன்முறைப்படுத்தப்பட்டது - ஆணை வரப்பெற்றது - தொடர்பாக.

பார்வை:

1. துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், தஞ்சாவூர் அவர்களின் கடித ந.க.எண்.1729/அ6/2008 நாள் 18.09.2019.
2. இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.83977/ப.தொ.4/இரு3/2019 நாள்:13.09.2021.
3. துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், திருவாரூர் அவர்களின் கடித ந.க.எண்.6551/அ3/2021, நாள்: 02.03.2022.
4. இவ்வலுவலக கடித ந.க.எண்.83977/ப.தொ.4/இரு3/2019 நாள்:26.03.2022 மற்றும் 31.10.2022.
5. அரசாணை. (2டி)எண்.26, மருத்துவம்- மக்கள் நல்வாழ்வுத்(ஏபி1) துறை, நாள்:24.03.2023.
6. அரசு கடித எண்.3474129/ஏபி1/2023-2 மருத்துவம்- மக்கள் நல்வாழ்வுத்(ஏபி1) துறை, நாள் 24.03.2023.

******

பார்வை இரண்டில் காணும் இவ்வலுவலக செயல்முறை ஆணையின்படி திரு.இரா.அருண்குமார் த/பெ (அமரர்) திரு.என்.ராஜேந்திரன் என்பவர் கருணை அடிப்படையில் தற்காலிக இளநிலை உதவியாளராக ஆரம்ப சுகாதார நிலையம், ஆலூர், திருவாரூர் சுகாதாரப்பகுதி மாவட்டத்தில் 16.09.2021ல் பணிநியமனம் செய்யப்பட்டார்.

2. பார்வை ஐந்தில் காணும் அரசாணையின்படி தனியர் பணியில் இணைந்த நாளான 16.09.2021 அன்று முற்பகல் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறைபடுத்தப்பட்டு அரசின் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. அதனைத்தொடர்ந்து தனியரின் அனைத்து அசல் சான்றிதழ்களும் பார்வை ஆறில் காணும் அரசு கடிதத்தத்துடன் இணைத்து அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

3. எனவே பார்வை ஆறில் காணும் கடிதத்துடன் இணைத்து வரப்பெற்ற தனியரின் கீழ்க்கண்ட அசல் சான்றிதழ், பணிவரன்முறை அரசாணை ஆகியவை திருவாரூர் துணை இயக்குநர் அவர்களுக்கு அனுப்பிவைக்கப்படுகிறது. மேலும் தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் மேற்கொள்ளுமாறு துணை இயக்குநர் சுகாதாரப்பணிகள் திருவாரூர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

...2

1. திரு.இரா.அருண்குமார் என்பவரின் பத்தாம் வகுப்பு மதிப்பெண் சான்று(அசல்)(4661846)
2. திரு.இரா.அருண்குமார் என்பவரின் மாற்றுச்சான்று (TC)(அசல்)( எண் 16315)

தா.முருகதாஸ்,
இணைஇயக்குநர்(நிர்வாகம்)

பெறுநர்

துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் திருவாரூர் (அரசாணை. (2ப)எண்.26, மருத்துவம்- மக்கள் நல்வாழ்வுத்(ஏபி1) துறை, நாள்:24.03.2023 இணைக்கப்படுகிறது. அசல் அரசாணையினை தனியருக்கு சார்பு செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

நகல்

திரு.இரா.அருண்குமார், இளநிலை உதவியாளர்,
அரசு ஆரம்ப சுகாதார நிலையம், ஆலூர், திருவாரூர் சுகாதாரப் பகுதி மாவட்டம்.
(துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள், திருவாரூர் மூலமாக)

**//உண்மை நகல் உத்தரவின்படி அனுப்பப்படுகிறது//**

கண்காணிப்பாளர்.